34) ஒரு நகரத்தை இரு கட்டங்களில் அபிவிருத்தி செய்யத் திட்டமிடப்பட்டிருந்தது. முதல் கட்டத்துக்குப் 10 மாதங்களும் இரண்டாம் கட்டத்திற்கு 15 மாதங்களும் எடுக்கின்றன. நகரத்தின் அபிவிருத்திப் பணி 2010 ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில் ஆரம்பிக்கப்பட்டது. எனின் எந்த ஆண்டில் நகரம் அபிவிருத்தி செய்து முடிக்கப்படும்?

1. 2014 2. 2013 3. 2012

(2010 ஆகஸ்ட்)

35) ஒரு நிரையில் கண்ணன் தொடக்கத்திலிருந்து 12வதாக நிற்கின்றான். அவன் கடைசியிலிருந்து 8வதாக நிற்கின்றான். எனில் குறித்த நிரையில் எத்தனை நபர்கள் நிற்கின்றனர்?

1. 19 2. 20 3. 21

(2011 ஆகஸ்ட்)

36) அந் நிரையில் மோகன் தொடக்கத்திலிருந்து 5வதாக நின்றால் அவனுக்குப் பின்னால் எத்தனை நபர்கள் நிற்கின்றனர்?

1. 16 2. 15 3. 14

(2011 ஆகஸ்ட்)

37) இன்று ஞாயிற்றுக்கிழமை நேற்று முன்தினத்துக்கு கடந்த திங்கட்கிழமைக்கிடையே எத்தனை நாட்கள் உள்ளன?

1. 1 2. 2 3. 3

(2011 ஆகஸ்ட்)

www.lkedu.lk

38) உட்பக்கம் தெரியாத பெட்டி ஒன்றின் மூன்று நீலநிறப் பேனைகளும் மூன்று கறுப்பு நிறப் பேனைகளும் உள்ளன. பேனைகளைப் பார்க்காமல் ஒரே நிறத்திலான இரு பேனைகளைத் தவறாமல் பெறுவதற்குப் பெட்டியிலிருந்து வெளியே எடுக்க வேண்டிய பேனைகளின் குறைந்தபட்ச எண்ணிக்கை யாது?

1. 4 2. 5 3. 6

(2011 ஆகஸ்ட்)

39) ஒரு தொட்டியில் கொள்வனவு 10 லீற்றர் ஆகும். ரஞ்சன் ஒரு தடவைக்கு நான்கு லீற்றர் வீதம் இட்டு அத்தொட்டியில் நீரை நிரப்புகின்றார். ஒவ்வொரு தடவைக்கும் அவருடைய தம்பி இரண்டு லீற்றர் வீதம் அந்நீரை வெளியே எடுக்கின்றார். ரஞ்சன் எத்தனை தடவை நீரை இட்டபின்னர் முதன்முதலாகத் தொட்டி நிரம்பும்?

1. 4 2. 5 3. 6



(2011 ஆகஸ்ட்)

40) குகனிடம் இரண்டு ரூபாய் நாணயங்களாகவும் ஐந்து ரூபாய் நாணயங்களாகவும் ரூபா. 23 உள்ளது. அதில் இருக்கத்தக்க இரண்டு ரூபாய் நாணயங்களது எண்ணிக்கை யாது?

1. 3 2. 4 3. 6

(2011 ஆகஸ்ட்)

41) சிறுவன் ஒருவன் பூம்பாத்தியை அமைப்பதற்கு ஓர் இடத்தில் இருந்து வடக்கு நோக்கி 3 மீற்றரும் அவ்விடத்திலிருந்து கிழக்கு நோக்கி 3 மீற்றரும் அவ்விடத்திலிருந்து தெற்கு நோக்கி 6 மீற்றரும் அவ்விடததிலிருந்து தொடக்கத் தானத்திற்கும் ஒரு கயிற்றை இழுத்துக் தரையில் அடையாளமிட்டான் எனின் அப்பூம்பாத்தியின் வடிவத்தைத் தெரிவு செய்க.

1. 
2. 
3. 

(2012 ஆகஸ்ட்)

42) கண்ணன் 14 விசுக்கோத்துப் பெட்டிகளைக் கடையில் வாங்கி வீட்டுக்குக் கொண்டு வர வேண்டியிருந்தது. அவன் ஒரு தடவைக்கு 4 விசுக்கோத்துப் பெட்டிகளை மாத்திரம் கொண்டு வரலாம். இதற்கேற்ப எல்லா விசுக்கோத்துப் பெட்டிகளையும் கொண்டு வருவதற்கு அவர் குறைந்த பட்சம் எத்தனை தடவைகள் செலல வேண்டும்?

1. 3 2. 4 3. 5

(2012 ஆகஸ்ட்)

www.lkedu.lk

43) முரளியின் வீட்டில் உள்ள கடிகாரத்தின் நேரம் குறித்த நேரத்திலும் பார்க்க 10 நிமிடம் பிந்தியது. இதற்கேற்ப முற்பகல் 6.30இற்கு வீட்டிலிருந்து புறப்பட்ட முரளி பாடசாலைக்குச் செல்லும் போது சரியான நேரத்தைக் காட்டும பாடசாலைக் கடிகாரத்தில் மு.ப 7.10ஆக இருந்தது. அவன் வீட்டிலிருந்து பாடசாலைக்குச் செல்வதற்கு எடுத்த நேரம் எத்தனை நிமிடங்கள்?

1. 50 2. 40 3. 30

(2012 ஆகஸ்ட்)

44) 2 வாழைப்பழங்களின் விலை ரூபாய் 30 ஆகும். ஒரு கொய்யாப்பழத்தின் விலை ஒரு வாழைப்பழத்தின் விலையிலும் பார்க்க 5 ரூபாய் கூடியது. ஒரு மாம்பழத்தின் விலை 1 வாழைப்பழம், 1 கொய்யாப்பழம் ஆகியவற்றின் மொத்த விலைக்குச் சமனாகும் எனின் ஒரு மாம்பழத்தின் விலை யாது?

1. ரூ. 30 2. ரூ.35 3. ரூ. 45

(2012 ஆகஸ்ட்)

45) 10படிகள் உள்ள ஒரு படிக்கட்டில் A முதல் படியிலும் B பத்தாம் படியிலும் நிற்கின்றனர். A ஒரு படியிலும் ஏறும் போது B இரு படிகள் இறங்கினால் அவர்கள் இருவரும் எத்தனையாவது படியில் சந்திப்பர்?

1. 4ம் படியில் 2. 5ம் படியில் 3. 6ம் படியில்

(2012 ஆகஸ்ட்)

46) மோகனும் ரவியும் ஒரு வட்ட ஓட்டப் பாதையில் ஓட்டத்தை ஆரம்பித்தனர். ரவி அரைச் சுற்று ஓடும் போது மோகன் ஒரு சுற்றை ஓடி முடித்து முன்னோக்கி வந்து ரவியைக் கடந்தான் இதற்கேற்ப,

1. மோகனின் கதி ரவியின் கதியின் மூன்று மடங்காகும்.
2. மோகனின் கதி ரவியின் கதியின் இரு மடங்காகும்.
3. ரவியின் கதி மோகனின் கதியின் மூன்று மடங்காகும்.

(2012 ஆகஸ்ட்)

47) சீதாவின் தற்போதைய வயது 11 ஆகும். அவளுடைய தாயாரின் தற்போதைய வயது கீதாவின் வயதில் மூன்று மடங்கிலும் பார்க்க மூன்றினால் கூடியதாகும். இன்னும் நான்கு ஆண்டுகளில் தாயாருடைய வயது என்ன?

1. 36 2. 37 3. 40

(2014 ஆகஸ்ட்)

www.lkedu.lk

48) ஆண்டில் சில மாதங்களுக்கு 31 நாட்களும் வேறு சில மாதங்களுக்கு 30 நாட்களும் உள்ளன. அவ்வாறெனின் 28 நாட்கள் உள்ள மாதங்களின் எண்ணிக்கை யாது?

1. 1 2. 2 3. 12

(2014 ஆகஸ்ட்)

49) ஒரு பாடசாலையில் விளையாட்டு விழா முற்பகல் 9 மணி 30 நிமிடத்திற்கு ஆரம்பித்து அது 4 மணித்தியாலம் 45 நிமிடத்திறகு பின்னர் முடிவடைந்தது. விளையாட்டு விழா முடிவடைந்த நேரத்தை இருபத்து நான்கு கடிகாரத்தில் காட்டும் விதத்தை இலக்கங்களில் எழுதுக.

.....

(2014 ஆகஸ்ட்)

50) ஒரு பேருந்து தரிப்பிடத்திலிருந்து

- ஒவ்வொரு 30 நிமிடத்திற்கு ஒரு தடவை கொழும்புக்கு ஒரு பேருந்து புறப்படுகின்றது.
- ஒவ்வொரு 45 நிமிடத்திற்கு ஒரு தடவை அனுராதபுரத்திற்கு ஒரு பேருந்து புறப்படுகின்றது.
- விடியற்காலை 5.30 இற்கு முதல் இரு பேருந்துக்கள் கொழும்புக்கும் அனுராதபுரத்திற்கும் புறப்பட்டுச் செல்கின்றன.

மறுபடியும் இரு பேருந்துகளும் கொழும்புக்கும் அனுராதபுரத்திற்கும் ஒரு தடவையில் எப்போது புறப்பட்டுச் செல்லும்?

1. மு.ப. 6.45 2. மு.ப. 6.15 3. மு.ப. 7.00

(2014 ஆகஸ்ட்)

51) நிலாவிடம் ரூ. 100, ரூ. 50, ரூ.20 நாணயத் தாள்களில் மாத்திரம் ரூ250 உண்டு. அவளிடம் உள்ள ரூ. 20 தாள்களின் எண்ணிக்கை?

1. 4 2. 5 3. 10

(2014 ஆகஸ்ட்)

52) ஒரு பேருந்தில் சென்ற மாணவன் தனது பயணச் சீட்டுக்காக நடத்துநரிடம் ரூ.20ஐ வழங்கிய போது நடத்துநர் அம் மாணவனிடம் மேலும் ரூ.2.00ஐ பெற்று ரூ.10.00ஐ மீதியாகக் கொடுத்தார். எனின் பேருந்து கட்டணம் எவ்வளவு?

1. ரூ. 10 2. ரூ. 12 3. 14

(2015 ஆகஸ்ட்)

www.ikedu.lk

53) 4, 5 ஆகிய இரு எண்களினாலும் மீதியின்றி வகுபடக் கூடிய 25இற்கு இடையே உள்ள எண்களில் எண்ணிக்கை யாது?

1. 2 2. 4 3. 1

(2015 ஆகஸ்ட்)

54) மருந்து குடிப்பதாக நோயாளி ஒருவருக்கு வைத்தியர் கீழே குறிப்பிடப்பட்ட அறிவித்தலை வழங்கினார். "ஒரு தடவையில் 2 வில்லைகள் வீதம் ஒரு நாளைக்கு 3 தடவைகள் எடுக்கவும்"

நோயாளிக்கு 50 மருந்து வில்லைகள் தரப்பட்டுள்ளன. முதலாவது மருந்து வேளை காலை சாப்பாட்டுக்குப் பின்னர் எடுக்கப்பட்டதாயின் அம்மருந்து வில்லைகள் எத்தனை முழு நாட்களுக்குப் போதுமானதாகும்?

1. 8 2. 9 3. 25

(2015 ஆகஸ்ட்)

55. இலங்கைக்குச் சுதந்திரம் எந்த நூற்றாண்டில் எந்த தசாப்தத்தில் கிடைத்தது?

1. 19ம் நூற்றாண்டின் 5ம் தசாப்தம்
2. 20ம் நூற்றாண்டின் 4ம் தசாப்தம்
3. 20ம் நூற்றாண்டின் பின் 5ம் தசாப்தம்

(2016 ஆகஸ்ட்)

56) ஒரு பாடசாலையில் ஒரு குறித்த விழாவின் தொடக்கத்தில் 9 மெழுகுவர்த்திகள் கொழுத்துவதற்கு தயார் செய்யப்பட்டுள்ளது. ஒரு மெழுகுவர்த்தி எரியும் நேரம் 30 நிமிடங்கள் ஆகும். 9 மெழுகுவர்த்திகளையும் ஒரே தடவையில் கொளுத்தினால் அவை எல்லாம் எவ்வளவு நேரத்திற்கு ஒளிரும்?

1. 30 நிமிடம் 2. 270 நிமிடம் 3. 300 நிமிடம்

(2016 ஆகஸ்ட்)

57) 31 நாட்களாகக் கொண்ட ஒரு மாத்தில் செவ்வாய்க் கிழமை, புதன்கிழமை, வியாழக்கிழமை ஆகிய நாட்கள் ஐந்து வீதம் உள்ளன. எனின் அம்மாதத்தின் 24ஆம் திகதி என்ன நாளாகும்?

1. புதன்கிழமை 2. வியாழக்கிழமை 3. வெள்ளிக்கிழமை

(2017 ஆகஸ்ட்)

www.lkedu.lk

58) முந்தநாள் செவ்வாய்க்கிழமை ஆகும். மோகனின் பிறந்த தினம் நாளை மறுதினம் வருகின்றது. எனின் மோகனின் பிறந்தநாள் வரும் நாள் எது?

1. சனிக்கிழமை 2. ஞாயிற்றுக்கிழமை 3. திங்கட்கிழமை

(2018 ஆகஸ்ட்)

59) ஒரு வினாடி வினா போட்டியில் 5 வினாக்கள் கேட்கப்பட்டன. முதலாம் வினாவிற்கு ஒரு புள்ளியும் 2ம் வினாவிற்கு இரண்டு புள்ளியும் 3ம் வினாவிற்கு மூன்று புள்ளியும் 4ம் வினாவிற்கு நான்கு புள்ளிகளும் 5ம் வினாவிற்கு 5 புள்ளிகளும் வழங்கபட்டன. இவ்வாறு 13 புள்ளிகளைப் பெற்ற ஒரு மாணவன் எத்தனையாம் வினாவிற்கு விடை தர முடியாமல் இருந்தது?

1. முதலாம் 2. இரண்டாம் 3. மூன்றாம்

(2019 ஆகஸ்ட்)

60) மூன்று வகுப்பிலுள்ள மாணவர்களது எண்ணிக்கை 36, 37, 38 ஆகும். அவற்றுள் ஒரு வகுப்பில் ஆண்களின் எண்ணிக்கையை விட மூன்று பெண்பிள்ளைகள் கூடுதலாக உள்ளனர். அந்த வகுப்பில் உள்ள மொத்த மாணவர் எண்ணிக்கை யாது?

1. 36 2) 37 3. 38

(2020 ஆகஸ்ட்)

www.lkedu.lk

திறன் – 6

தொடர்பு காணல்

- **பின்வருவனவற்றின் தொடர்புகளை இனங்கண்டு சரியான விடையினைத் தெரிவு செய்க**

01) செருப்பு → இறப்பர், கடதாசி → .....
1. இரும்பு 2. வைக்கோல் 3. மூங்கில்

02) களிமண் → பானை, தங்கம் → .....
1. வளையல் 2. உலோகம் 3. பளபளப்பு

03) வெப்பம் → சூரியன், ஒளி → .....
1. வெளிச்சம் 2. மின்குமிழ் 3. மின்விசிறி

04) புரதம் → பால், மாச்சத்து → .....
1. கீரை 2. முட்டை 3. சீனி

05) பறத்தல் → காகம், நகர்தல் → .....
1. ஆடு 2. தீக்கோழி 3. ஆமை

06) கசப்பு → பாகற்காய், துவர்ப்பு → .....
1. உப்பு 2. பாக்கு 3. தேன்

07) நத்தை → தாவரஉண்ணி, தவளை → .....
1. ஊனுண்ணி 2. அனைத்துமுண்ணி 3. தாவரஉண்ணி

08) கொடி → திராட்சை, பூண்டு → .....
1. மிளகாய் 2. குப்பைமேனி 3. வாழை

09) நேரம் → கடிகாரம், நீளம் → .....
1. மீற்றர் கோல் 2. மீற்றர் 3. கிலோமீற்றர்

10) மகிழ்ந்து → பயணம், குதிரை → .....
1. போட்டி 2. பணம் 3. சவாரி

11) மீட்டுதல் → வீணை, அடித்தல் → .....
1. வயலின் 2. மேளம் 3. புல்லாங்குழல்

www.lkedu.lk

LEARN EASY

- KNOWLEDGE IS POWER -

www.learneasy.lk || www.lkedu.lk

76667-4945

தரம் 3

zoom

அனுமதிகளுக்கு

76667-4945

சுற்றாடல்	திங்கள் வியாழன் – மாலை 6.00–7.00
ஆங்கிலம்	சனி ஞாயிறு – மாலை 7.00–8.00
தமிழ்	செவ்வாய் புதன் – மாலை 7.00–8.00
கணிதம்	சனி ஞாயிறு – காலை 8.00–9.00

நுண்ணறிவு (பிரிவு–1) – சனி ஞாயிறு – காலை 7.00–8.00

VIDEO RECORDING வழங்கப்படும்

மாதம் – 1500/=

12) மாங்காய் → அச்சாறு, அன்னாசி → .....
1. பழப்பாகு 2. இனிமை 3. விளைச்சல்

13) அரிசி → சோறு, பால் → .....
1. தயிர் 2. உணவு 3. சுவை

14) பகல் → வெளிச்சம், இரவு → .....
1. நித்திரை 2. இருள் 3. நேரம்

15) பாடசாலை → கல்வி, வைத்தியசாலை → .....
1. நோய் 2. மாத்திரை 3. சிகிச்சை

16) எரிபொருள் → பேருந்து, மின்சாரம் → .....
1. வெளிச்சம் 2. நீர் 3. தொலைக்காட்சி

17) பாடசாலை → மாணவர், பேருந்து → .....
1. சாரதி 2. நடத்துநர் 3. பயணிகள்

18) கொள்ளு → குதிரை, வைக்கோல் → .....
1. மாடு 2. முயல் 3. மான்

19) தாகம் → நீர், பசி → .....
1. வயிறு 2. உணவு 3. நோய்

20) நிறை → கிலோகிராம், கொள்ளளவு → .....
1. லீற்றர் 2. மீற்றர் 3. கிராம்

21) பழம் → கிளி, மீன் → .....
1. மயில் 2. கொக்கு 3. ஆந்தை

22) மா → பிட்டு, கரும்பு → .....
1. பயிர் 2. கோதுமை 3. சீனி

23) வித்து → பயறு, தானியம் → .....
1. தினை 2. உணவு 3. மா

24) கண் → பார்வை, மூக்கு → .....
1. நுகர்தல் 2. கேட்டல் 3. சுவைத்தல்

25) மாரி → குளிர், கோடை → .....
1. வெயில் 2. வெப்பம் 3. வியர்வை

www.lkedu.lk

● **சொற்களுக்கிடையிலான சரியான தொடர்பினை இனங்கண்டு விடையின் கீழ் கோடிடுக.**

26) சிங்கம் கர்ச்சிப்பது போல குரங்கு .....
1. அழும் 2. அலறும் 3. அலப்பும்

27) பனைக்கு ஓலை போல கரும்புக்கு .....
1. ஓலை 2. தோகை 3. கீற்று

28) வைத்தியருக்கு வைத்தியசாலை போல வியாபாரிக்கு .....
1. சந்தை 2. பொருட்கள் 3. நுகர்வோர்

29) கேட்டலுக்கு வானொலி போல பார்த்தலுக்கு .....
1. கண் 2. பத்திரிகை 3. தொலைபேசி

30) அப்பாவுக்கு அம்மா போல நண்பனுக்கு .....
1. நண்பி 2. நங்கை 3. நாயகி

31) மீனவனுக்கு கடல் போல விளையாட்டு வீரருக்கு .....
1. துடுப்பாட்டம் 2. போட்டி 3. மைதானம்

32) கத்தரிக்கோலுக்கு வெட்டுதல் போல சீவுளி .....
1. துளைத்தல் 2. சீவுதல் 3. அழுத்துதல்

33) தச்சுவேலைக்கு உளிபோல விவசாயத்துக்கு .....
1. மண்வெட்டி 2. சாந்தகப்பை 3. புரிச்சாவி

34) மானுக்கு கலை போல குதிரைக்கு .....
1. போத்து 2. குண்டு 3. வடவை

35) கோழிக்கு குஞ்சு போல எருமைக்கு .....
1. குட்டி 2. கன்று 3. குருளை

36) கப்பலுக்குக் கடல் போல தொடரூந்துக்கு .....
1. தண்டவாளம் 2. எரிபொருள் 3. பயணிகள்

37) கூடைக்குப் பிரம்பு போல பெட்டிக்கு .....
1. பனையோலை 2. களிமண் 3. பாதுகாப்பு

38) பாடலுக்குப் பாடகன் போல கவிதைக்கு .....
1. தலைவன் 2. புலவன் 3. பலவான்

www.lkedu.lk

39) மாதுளைக்கு முத்துப் போல தாமரைக்கு .....
1. பொகுட்டு 2. விதை 3. மணி

40) மாவட்டத்துக்கு மட்டக்களப்பு போல மாகாணத்துக்கு .....
1. திருகோணமலை 2. நகரம் 3. ஊவா

● **கட்டங்களில் உள்ளவற்றின் தொடர்புகளை இனங்கண்டு அவற்றிலுள்ள A, B,C எனும் ஆங்கில எழுத்துக்களால் குறிக்கப்பட்டுள்ள இடைவெளிகளுக்கு முறையே அமையும் விடையினைத் தெரிவு செய்க.**

41)

A	பானம்	உணவு
வடை	B	சோறு
பற்றீஸ்	பழரசம்	C

1. A - சிற்றூண்டி B - இளநீர் C - பிட்டு
2. A - சிற்றூண்டி B - பழப்பாகு C - தேநீர்
3. A - சிற்றூண்டி B - பாயாசம் C - இடியப்பம்

42)

தானியம்	A	கிழங்கு
B	மாம்பழம்	மரவள்ளி
இறுங்கு	அன்னாசி	C

1. A - கொய்யா B - தினை C - முள்ளங்கி
2. A - பழம் B - வரகு C - கரட்
3. A - மாதுளை B - நெல் C - வற்றாளை

43)

மிருகம்	பறவை	A
சிங்கம்	B	கரப்பான்
C	கோழி	வெட்டுக்கிளி

1. A - வீட்டு ஈ B - காகம் C - மான்
2. A - பூச்சி B - வெளவால் C - மாடு
3. A - பூச்சி B - பருந்து C - ஆடு

44)

ஆகாயம்	A	தரை
விமானம்	கப்பல்	பேருந்து
B	வள்ளம்	C

1. A - தோணி B - பட்டம் C - மகிழூர்ந்து
2. A - நீர் B - விண்கலம் C - சிற்றூர்ந்து
3. A - நீர் B - பலூன் C - உந்துருளி

www.lkedu.lk

45)

A	செடி	கொடி
வேம்பு	B	பாகல்
பலா	மிளகாய்	C

1. A - மரம் B - கத்தரி C - பூசணி
2. A - முதிரை B - முருங்கை C - மரவள்ளி
3. A - தாவரம் B - பூண்டு C - கொடித்தோடை

46)

மலர்	A	மாதம்
B	பச்சை	பங்குனி
மல்லிகை	நீளம்	C

1. A - நீலம் B - ரோசா C - மார்கழி
2. A - பச்சை B - செவ்வந்தி C - கார்த்திகை
3. A - நிறம் B - தாமரை C - வைகாசி

47)

காற்றுத்துளை கருவி	A	நரம்புக்கருவி
B	மேளம்	வயலின்
நாதஸ்வரம்	உடுக்கு	C

1. A - மிருதங்கம் B - றம்பட் C - தம்புரா
2. A - தோற்கருவி B - புல்லாங்குழல் C - கிட்டார்
3. A - நிறம் B - தாமரை C - வைகாசி

48)

A	குளம்	ஆறு
தியலும	B	வளவங்கை
துன்கிந்த	கலாவாவி	C

1. A - நீர்வீழ்ச்சி B - பராக்கிரமபாகு சமுத்திரம் C - களனிகங்கை
2. A - நீர்வீழ்ச்சி B - எலஹரகால்வாய் C - ஜின்கங்கை
3. A - பம்பரகந்த B - விக்டோறியா C - களுகங்கை

49)

விளையாட்டு	A	பாடம்
B	தினகரன்	விஞ்ஞானம்
காற்பந்து	வீரகேசரி	C

1. A - வாசித்தல் B - விளையாடுதல் C - படித்தல்
2. A - பத்திரிகை B - போட்டி C - விஞ்ஞானம்
3. A - பத்திரிகை B - கிரிகெட் C - கணிதம்

www.lkedu.lk


50)

நோய்	சுவையூட்டி	A
கொரோனா	B	கற்பூரவள்ளி
C	உப்பு	துளசி

1. A - மூலிகை B - சீனி C - டெங்கு
2. A - மூலிகை B - இனிப்பு C - தும்மல்
3. A - முடிதும்பை B - சர்க்கரை C - மருந்து


● **எண் கோலங்களுக்கிடையிலான தொடர்புகளை அவதானித்து இடைவெளிக்குரிய விடையைத் தெரிவு செய்க.**

51)




1. 10
2. 12
3. 18

52)




1. 8
2. 9
3. 6

53)




1. 32
2. 16
3. 64

54)




1. 20
2. 60
3. 80

55)



1. 22
2. 121
3. 132


56)



1. 8
2. 7
3. 6


www.ikedu.lk

57)




1. 17, 34
2. 18, 36
3. 19, 38

58)




1. 15
2. 37
3. 41

59)




1. 10
2. 5
3. 4

60)




1. 2
2. 1
3. 36

61)




1. 64
2. 44
3. 34

62)



1. 35
2. 28
3. 42


63)



1. 49
2. 56
3. 42


www.lkedu.lk

64)




1. 61
2. 68
3. 72

65)




1. 13
2. 12
3. 11

66)




1. 126
2. 114
3. 39

67)




1. 7
2. 9
3. 5

68)




1. 42
2. 62
3. 52

69)



1. 13
2. 12
3. 11


70)



1. 47
2. 46
3. 57


www.ikedu.lk

71)




1. 100
2. 160
3. 95

72)




1. 100
2. 125
3. 150

73)




1. 21
2. 80
3. 16

74)




1. 30
2. 35
3. 12

75)




1. 25
2. 30
3. 15

76)



1. 5
2. 15
3. 10


77)



1. 0
2. 36
3. 48


www.lkedu.lk

78)




1. 24
2. 48
3. 36

79)




1. 47
2. 41
3. 44

80)




1. 51
2. 52
3. 50

81)




1. 15
2. 16
3. 17

82)




1. 18
2. 36
3. 9

83)




1. 24
2. 21
3. 27

84)




1. 48
2. 92
3. 20

85)



1. 240
2. 230
3. 232


86)



1. 28
2. 36
3. 42


www.lkedu.lk

87)




1. 2
2. 18
3. 12


88)




1. 36
2. 42
3. 48

89)










1. 71
2. 81
3. 91

90)










1. 32
2. 33
3. 31

91)








1. 29
2. 28
3. 32


92)


21	.....	27
18	3	6
15	12	9

1. 20
2. 22
3. 24

93)










1. 42
2. 28
3. 32

94)








1. 11
2. 30
3. 40


www.lkedu.lk

95)




1. 15
2. 13
3. 14

96)




1. 50
2. 10
3. 20

97)




1. 15
2. 36
3. 42

98)



1. 39
2. 36
3. 42

99)





1. 75
2. 65
3. 85

தொடர்பு காணல் திறன் தொடர்பான கடந்த கால வினாக்கள்


- **1, 2 ஆகிய வினாக்களில் உள்ள அடைப்புகளில் இருக்கும் கூட்டத்துடன் சேர்ப்பதற்கு மிகப் பொருத்தமான உருவைத் தெரிவு செய்க.**

1)



1. 
2. 
3. 


2)



1. 
2. 
3. 

(2019 ஆகஸ்ட்)

3) பின்வரும் உருவில் உள்ள எண் கோலத்திற்கேற்ப அடைப்பு [?] உடன் பொருந்தும் எண்ணைத் தெரிவு செய்க.



1. 4
2. 6
3. 8

(2019 ஆகஸ்ட்)

www.lkedu.lk

● **4, 6 ஆகிய வினாக்களில் உள்ள வெற்றிடத்திற்குப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.**

4) விளக்கிற்கு மெழுகுவர்த்திக்கும் ஒளி போன்று புத்தகத்திற்கும் சஞ்சிகைக்கும் .....

1. அறிவு 2. வாசிப்பு 3. பார்வை

(2018 ஆகஸ்ட்)

5) வாளுக்கும் சுத்தியலுக்கும் சீவுளிக்கும் தச்சன் போன்று அரிவாளுக்கும் மண்வெட்டிக்கும் கலப்பைக்கும் .....

1. மீனவன் 2. மேசன் 3. விவசாயி

(2018 ஆகஸ்ட்)

● **சொற்கள் உள்ள அட்டைகள் வைத்திருக்கப்பட்டிருக்கும் கோலத்தை விளங்கிக் கொண்டு 6, 7 ஆகிய வினாக்களுக்கு விடை தருக.**

அம்பு	புத்தி	திருகு	குஞ்சு
சுமந்து		கைப்பிடி	

6) வெறும் அட்டைக்குப் பொருத்தமான சொல்லைத் தெரிவு செய்க.

1. படுக்கை 2. துதிக்கை 3. உடுக்கை

7) திருகு என்பதற்குப் பதிலாக இடத்தக்க அட்டையைத் தெரவு செய்க.

1. உருகு 2. பருகு 3. திக்கு

(2018 ஆகஸ்ட்)

8) பின்வரும் வரிப்படத்திற்கு ஏற்ப இரு வெற்றிடங்களுக்கும் பொருத்தமான இரு உருக்களும் இடம் பெறும் விடையைத் தெரிவு செய்க.

F → ㄱ எனின் P → _____ E → ∃ எனின் C →

1. உம் உம் 2. உம் உம் 3. உம் உம்
ꟻ Ɔ P Ɔ ꟻ ∪

(2018 ஆகஸ்ட்)

● **9, 10 ஆகிய வினாக்களில் தரப்பட்டுள்ளவற்றில் மூன்றை ஒரு கூட்டமாகவும் இரண்டை வேறொரு கூட்டமாகவும் வேறுபடுத்தலாம். அவ்விரு கூட்டங்களையுமம் சேராதது எது?**

9) ஜனவரி, பெப்ரவரி, மார்ச், ஏப்ரல், மே, ஜூன்

1. பெப்ரவரி 2. ஏப்ரல் 3. ஜூன்


www.ikedu.lk


10) லீற்றர், மீற்றர், கிலோமீற்றர், கிலோகிராம், கிராம், சென்ரிமீற்றர்


1. மீற்றர் 2. லீற்றர் 3. கிராம்

(2017 ஆகஸ்ட்)

11) பின்வரும் உருக்களில் உள்ள எண் கோலத்திற்கு ஏற்ப வெற்றிடத்தில் இருக்க வேண்டிய எண்ணைத் தெரிவு செய்க.







1. 3 2. 4 3. 5

(2017 ஆகஸ்ட்)

12) பின்வரும் உருவில் உள்ள எண் கோலத்திற்கு ஏற்ப வெற்றிடத்துக்குப் பொருத்தமான பகுதியைத் தெரிவு செய்க.

2	16	18	32
4			30
6		22	28
8	10	24	26

1.

12	20
14	

2.


20	14
12	


3.


14	20
12	

(2019 ஆகஸ்ட்)

13) பின்வரும் உருக்களில் உள்ள எண் கோலத்திற்கேற்ப வெற்றிடத்தில் இருக்க வேண்டிய எண்ணைத் தெரிவு செய்க.








1. 9 2. 6 3. 4

14) பின்வரும் உருவிலுள்ள கோலத்திற்கேற்ப A, B ஆகிய இடங்களில் இடப்பட வேண்டிய இடங்கள் முறையே யாவை?



1. 4, 3


2. 3, 2

3. 3, 4

(2017 ஆகஸ்ட்)

www.ikedu.lk


15) தரப்பட்டுள்ள உருக்களில் உள்ள எண்கோலத்தை இனங்கண்டு வெற்றிடத்துக்குப் பொருத்தமான எண்ணைத் தெரிவு செய்க.



1. 12 2. 60 3. 72


● **கோலத்திற்கேற்ப 16 ஆம் 17ஆம் வினாக்களின் வெற்றிடத்துக்குப் பொருத்தமான எண்ணைத் தெரிவு செய்க.**

16)



1. 4
2. 6
3. 12

17)



1. 44
2. 54
3. 63

(2016 ஆகஸ்ட்)

● **கீழே தரப்பட்டுள்ள எண்களின் ஒரு கோலம் உண்டாவதற்கு நீக்கப்பட வேண்டிய எண் யாது?**

18) 8, 10, 11, 12, 14, 16

1. 11 2. 10 3. 8

19) 30 , 22, 25, 20, 18, 15, 10

1. 22 உம் 15 உம் 2. 22 உம் 18உம் 3. 25 உம் 18 உம்

(2016 ஆகஸ்ட்)

www.lkedu.lk

● **சொற்களைக் கூட்டமாக்கும் போது வேறுபட்ட இயல்புடையதைத் தெரிவு செய்க.**

20) பத்திரிகை, பாடசாலை, சஞ்சிகை, நூலகம், புத்தகம்

1. பாடசாலையும் புத்தகமும்
2. புத்தகமும் நூலகமும்
3. நூலகமும் பாடசாலையும்

21) மாம்பழம், பணியாரம், அன்னாசி, பாற்சோறு, வாழைப்பழம்

1. பாற்சோறும் வாழைப்பழமும்
2. வாழைப்பழமும் பணியாரமும்
3. பணியாரமும் பாற்சோறும்

(2015 ஆகஸ்ட்)

22) வெற்றிடத்துக்குப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.

2	3	1	6
4	.....	3	24
2	3	.....	30
16	18	15	

1. 5, 3
2. 2, 5
3. 3, 2

(2015 ஆகஸ்ட்)

23) செய்தித்தாள், நாவல், கீதம், சிலை, கவிதை, பூ என்பவற்றில் பொருந்தாத சொல்லைத் தெரிவு செய்க.

1. செய்தித்தாள்
2. கீதம்
3. பூ

(2015 ஆகஸ்ட்)


24) சங்கரின் தந்தையின் தந்தைக்கும் சங்கரின் தம்பிக்குமிடையே உள்ள உறவு முறை யாது?

1. சிறிய தகப்பனும் மகனும்
2. மாமாவும் மருமகனும்
3. பாட்டனும் பேரனும்


● **மிகவும் நெருங்கிய தொடர்பு உள்ள உருச் சோடிக்குரிய அடைப்பைத் தெரிவு செய்க.**

25)


(1)



(2)




(3)




www.lkedu.lk

26) (1) (2) (3)



- **தரப்பட்டுள்ள உருக்களை கவனத்திற்கொண்டு விடை தருக.**




27) ஒன்றோடொன்று சினேகமாக இருப்பதற்கு அதிகம் வாய்ப்புள்ள இரண்டு விலங்குகள் எவை?

1. Aயும் Dயும் 2. Bயும் Cயும் 3. Bயும் Eயும்

28) மிகப்பெரிய விலங்கும் மிகச் சிறிய விலங்கும் முறையே.

1. Aயும் Bயும் 2. Cயும் Dயும் 3. Dயும் Eயும்

(2012 ஆகஸ்ட்)



29) P, Q ஆகிய இரண்டையும் ஏனையவற்றிலிருந்து வேறுபடுத்துமியல்பு யாது?

1. இறைச்சியை மாத்திரம் உணவாகக் கொள்ளல்.
2. வீடுகளை அண்டி வசித்தல்
3. இரவில் சுறுசுறுப்பாக இருத்தல்

30) Q, R ஆகியவற்றில் காணப்படும். ஆனால் P, S ஆகிவற்றில் இல்லாத இயல்பு யாது?

1. பழங்களை உணவாகக் கொள்ளல்
2. குடிபெயரும் பறவைகளாக இருத்தல்
3. நீரை அண்டி வசித்தல்


(2011 ஆகஸ்ட்)


www.lkedu.lk

31) வெற்றிடத்திற்கு பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.

2	7	12	1. 20
7	12	17	2. 22
12	17	.....	3. 25

32)




1. 
2. 
3. 

(2010 ஆகஸ்ட்)

33) A யின் தந்தை B யின் மகனெனில், A ஆனவர் B யிற்கு என்ன உறவு முறை?

1. பேரன் 2. பாட்டன் 3. மகன்


34) எண்கள் அமைந்துள்ள விதத்தைப் பார்த்து விடையைத் தெரிவு செய்க.



1. 30 உம் 35 உம் 2. 40 உம் 6 உம் 3. 33 உம் 32 உம்

(2010 ஆகஸ்ட்)


35) இக் கோலத்தில் A, B ஆகியவற்றுக்குப் பொருத்தமான எண்கள் முறையே யாவை?



1. 4 உம் 6 உம்
2. 6 உம் 4 உம்
3. 8 உம் 4 உம்

www.lkedu.lk


36) எண்கள் இடப்பட்ட கோலத்திற்கேற்ப வெற்றிடத்திற்குப் பொருத்தமான விடையை தெரிவு செய்க.



1. 8 2. 4 3. 12

(2010 ஆகஸ்ட்)

37)



1. 1
2. 2
3. 5

(2010 ஆகஸ்ட்)

● **அடைப்புகளில் இலக்கங்கள் ஒரு குறித்த கோலத்திற்கேற்ப இடப்பட்டுள்ளன. அதற்கேற்ப,**

38) எழுத்து A எழுதப்பட்டுள்ள அடைப்பிற்குப் பொருத்தமான எண் யாது?

1. 9 2. 10 3. 11

39) எழுத்து B எழுதப்பட்டுள்ள அடைப்பிற்கு பொருத்தமான எண் யாது?


1. 12 2. 11 3. 1



		3	4		A
1	2		5	8	
6					12
7		9	10		B

(2010 ஆகஸ்ட்)


● **3, 4 ஆகிய வினாக்களில் கட்டத்தினுள் உள்ள தொகுதியுடன் சேர்ப்பதற்கு மிகப் பொருத்தமான உரு எது?**

40)



1. 
2. 
3. 

41)



(2020 ஆகஸ்ட்)

1. 
2. 
3. 

www.lkedu.lk

திறன் – 7

காரண காரியங்களை இனங்காணல்

ஏதேனும் காரியம் அல்லது அக்காரியத்துக்குரிய காரணத்தை இனங்காணல்.

- **பின்வரும் கூற்றுகளுக்குப் பொருத்தமான காரணங்களைத் தெரிந்து கோடிடுக.**

1) கவிதா இன்று பாடசாலைக்கு வராமைக்கான காரணமாக அமைவது,
   1. அவளுக்குப் பாடசாலை வருவதற்கு விருப்பமின்மை.
   2. அவள் பயணித்த பேருந்து பழுதடைந்தமையால்
   3. அவளுக்கு சுகவீனம் ஏற்பட்டமையால்

2) கேசவன் பாடசாலை இல்ல விளையாட்டுப் போட்டியில் முதலாம் இடத்தினைப் பெற்றமைக்கான காரணமாக அமைவது,
   1. அவனுக்கு போட்டி நடுவர் உறவினர் என்பதால்
   2. அவன் தொடர்பயிற்சிகளில் ஈடுபட்டமையால்
   3. அவனுக்கு போட்டி கடினமாக அமைந்தமையால்

3) சூழலை நாம் பாதுகாக்க வேண்டும் என்பதற்கான பொருத்தமான காரணம்
   1. நாம் சந்தோசமாக வாழ்வதற்கு
   2. நாம் ஆரோக்கியமாக வாழ்வதற்கு
   3. நாம் ஆடம்பரமாக வாழ்வதற்கு

4) அண்மைக் காலத்தில் அதிக வெள்ளப்பெருக்கு ஏற்பட்டமைக்குக் காரணமாக அமையாதது எது?
   1. நீர் நிறைந்த குளங்களின் வான் கதவுகள் திறக்கப்பட்டமை
   2. அதிகளவு மழைவீழ்ச்சி கிடைத்தமை
   3. மக்கள் நீரை அதிகம் பயன்படுத்தாமை

5) கல்வித்துறையில் நாம் உயர்வடைவதற்குக் காரணமாக அமைவது,
   1. முயற்சியுடனும் ஆர்வத்துடனும் கற்றல்
   2. அதிக பணம் செலுத்திக் கற்றல்
   3. தனியார் கல்வி நிறுவனங்களில் மட்டும் கற்றல்

6) கடற்கரை ஓரங்களில் கல்வேலி அமைப்பதற்கான காரணமாக அமைவது,
   1. கடற்கரை அழகுபடுத்துவதற்காக
   2. கடலில் இருந்து பிராணிகள் வெளியேறுவதனைத் தடுக்க
   3. மண்ணரிப்பைத் தடுப்பதற்காக

www.lkedu.lk

LEARN EASY

- KNOWLEDGE IS POWER -

www.learneasy.lk || www.lkedu.lk

76667-4945

LEARN EASY KNOWLEDGE IS POWER

தரம் 4

zoom

அனுமதிகளுக்கு

76667-4945

சுற்றாடல்	செவ்வாய் வெள்ளி –	மாலை 07.10 – 08.00
ஆங்கிலம்	ஞாயிறு –	காலை 09.00 – 10.00
தமிழ்	வியாழன் – மாலை 07.10 – 08.00 சனி – மாலை 06.15 – 07.15	
கணிதம்	ஞாயிறு புதன் –	மாலை 06.15 – 07.15
சிங்களம்	வியாழன் –	மாலை 06.15– 07.15
SPOKEN ENGLISH	சனி –	காலை 09.00– 10.00

நுண்ணறிவு (பிரிவு–1) – சனி ஞாயிறு – இரவு 07.15–08.15

நுண்ணறிவு (பிரிவு–2) – செவ்வாய் வியாழன் – இரவு 08.00–09.00

VIDEO RECORDING வழங்கப்படும் மாதம் – 1500/=

7) சூழலில் அதிகளவில் மரங்களை நடுவதற்குக் காரணம்,
   1. சூழல் சமநிலையினைப் பாதுகாப்பதற்காக
   2. மரங்களை வெட்டி தளபாடங்களை செய்வதற்காக
   3. அதிகளவான உணவைப் பெறுவதற்காக

8) போக்குவரத்துச் சாதனங்களில் தொடரூந்து அதிக நன்மையளிப்பதற்குக் காரணம் யாது?
   1. தொடரூந்துப் பயணம் மகிழ்ச்சியானது என்பதால்
   2. தொடரூந்து மிக வேகமாகப் பயணிப்பதனால்
   3. அதிகளவான பயணிகள் பயணம் செய்ய முடியும் என்பதால்

9) நகரப் புறங்களில் அதிகளவான வீதி விபத்துக்கள் ஏற்படுவதற்குக் காரணமாக அமைவது,
   1. ஒளிச் சமிக்ஞை அதிகமாகக் காணப்படுவதால்
   2. சனநெரிசலும் வாகன நெரிசலும் அதிகமாக உள்ளமையால்
   3. வாகனச் சாரதிகளுக்கு நகரப் போக்குவரத்து பரீச்சயம் இன்மையால்

10) அரிய வளமான நீரின் தேவை தற்போது அதிகரித்து செல்வதற்கான காரணமாக அமைவது,
   1. சனத்தொகை அதிகரிப்பும் நீர் மாசடைதலும்
   2. உலகில் நீரின் அளவு குறைவு என்பதால்
   3. மக்கள் அதிகளவில் பயிர்செய்கையில் ஈடுபடுவதால்

11) இன்று கொரோனா நோய் அதிகளவில் சமூகத்தில் வேகமாகப் பரவுவதற்குக் காரணமாக அமைவது,
   1. மக்கள் சமூக இடைவெளியினைச் சரியாகப் பேணுவதால்
   2. கொரோனா உலகமெங்கும் உள்ளமையால்
   3. மக்கள் சுகாதாரப் பழக்கங்களைச் சரியாகக் கடைப்பிடிக்காமையால்

12) நாட்டில் அதிக மழை பெய்வதற்குக் காரணம்
   1. இலங்கையில் அதிக மலைகள் காணப்படுவதால்
   2. கடலில் தாழமுக்கம் ஏற்பட்டமையால்
   3. மக்கள் மழை வேண்டி இறை பிரார்த்தனையில் ஈடுபட்டமையால்

13) தொற்றா நோயான நீரழிவு நோய் ஏற்படுவதற்குக் காரணம்,
   1. பொருத்தமான உணவுப் பழக்கமின்மை
   2. மக்கள் அதிகமாக நெருங்கிப் பழகுதல்
   3. சமூக இடைவெளிகளைப் பேணாமை

www.ikedu.lk

14) தற்போது மலேரியாக் காய்ச்சல் இலங்கையில் ஒழிக்கப்பட்டமைக்கான காரணம்,
   1. மலேரியா நுளம்புகளை அழித்தமையாகும்
   2. இலங்கை மக்கள் ஒவ்வொரு வரும் வைத்தியசாலைக்குச் சென்றமையாகும்.
   3. பொருத்தமான பரிசோதனையும் சிகிச்சையும் அளிக்கப்பட்டமையாகும்.

15) இலங்கையில் நெல் அதிகளவில் பயிரிடுவதற்குக் காரணம்,
   1. இலங்கை மக்களின் பிரதான உணவு அரிசிச் சோறு என்பதால்
   2. நெல் பயிர்ச்செய்கை இலகுவானது என்பதால்
   3. இலங்கையில் நெல் மட்டுமே பயிரிடலாம் என்பதால்

16) தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சைக்குத் தோற்றும் எல்லா மாணவர்களும் சித்தியடையாமைக்கான காரணம்
   1. தரம் 5 மாணவர்களுக்கு குறித்த பரீட்சை பொருத்தமில்லாததால்
   2. மாணவர்கள் அனைவரும் ஆர்வத்துடன் கற்பதால்
   3. பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களில் குறிப்பிட்ட வீதம் தெரிவு செய்யப்படுவதால்.

17) சில காலங்களில் நாட்டில் மின்வெட்டு நடைமுறைப்படுத்துவதற்குக் காரணம்,
   1. மின்சாரம் உற்பத்திக்கு தேவையான நீர் கிடைக்காமையால்
   2. மின்சாரம் பாவனைக்கு அதிக மின்கட்டணம் அறவிடப்படுவதால்
   3. மின்சார உபகரணங்களின் விலை அதிகமாக உள்ளதால்

18) நாட்டில் தேங்காய் விலை அதிகரித்துக் காணப்படுவதற்குக் காரணமாக அமைவது,
   1. மக்கள் தேங்காயை பிரதான உணவாகக் பயன்படுத்துவதால்
   2. தேங்காய் உற்பத்தி குறைவடைந்துள்ளமையால்
   3. மக்கள் தேங்காய் உணவுகளை விரும்பாததால்

19) வெப்பமான பகுதிகளில் தேயிலை வளராமைக்கான காரணம்,
   1. குளிரான பிரதேசத்தில் மட்டுமே தேயிலை வளரும் என்பதால்
   2. வெப்பமான பகுதிகளில் மக்கள் தேயிலைப் பயிரிடவிரும்பாமையால்
   3. தேயிலைப் பயிர்கள் இலங்கைக்கு உரித்தான தாவரம் இல்லை என்பதால்

20) பதுளை போன்ற பிரதேசங்களில் சுனாமி ஏற்படாமைக்கான காரணமாக அமைவது,
   1. மக்கள் சுனாமி தொடர்பான பாதுகாப்புடன் செயற்படுவதால்
   2. பதுளை கடலை அண்டிய பிரதேசம் இல்லை என்பதால்
   3. பதுளையில் நீர் வீழ்ச்சிகள் அதிகமாக உள்ளமையால்

www.lkedu.lk

21) இன்றும் எமது நாட்டில் உணவைப் பேணும் பாரம்பரியமுறை கடைப்பிடிக்கப் படுவதற்கான காரணம்,
   1. மக்கள் பாரம்பரிய பழக்கங்களைப் பின்பற்ற வேண்டும் என சட்டம் உள்ளமையால்
   2. பாரம்பரிய முறைகள் இலகுவாகப் பின்பற்றலாம் என்பதால்
   3. பாரம்பரிய முறை மூலம் மட்டுமே உணவுகள் பேணப்படுவதால்

22) தினமும் சூரிய நமஸ்கரம் செய்யவேண்டும் என வலியுறுத்துவதற்கான காரணமாக அமைவது,
   1. எமது உடல், உளம் என்பன உறுதி பெறுவதற்கு
   2. சூரிய ஒளியில் அதிக ஊட்டச்சத்து கிடைப்பதால்
   3. சூரிய நமஸ்காரம் செய்வது இலகுவானது என்பதால்

23) இலங்கையில் பாடசாலைகளுக்கு தவணை விடுமுறை வழங்கப்படுவதற்கான காரணமாக அமைவது,
   1. கற்பிக்கும் ஆசிரியர்களுக்கு ஓய்வு தேவை என்பதற்காக
   2. இலங்கை நாட்காட்டியில் விடுமுறைகள் உள்ளமையால்
   3. தொடர்கற்றலில் ஈடுபடும் மாணவர்களுக்கு ஓய்வு வழங்குவதற்காக

24) இலங்கையில் கொரோனா தனிமைப்படுத்தல் சட்டம் நடைமுறைப்படுத்தப் படுவதற்கான காரணமாக அமைவது,
   1. தனிமையில் இருந்தால் சுதந்திரமாக வாழலாம் என்பதால்
   2. நோய் பரவுவதில் இருந்து ஏனையவர்களைப் பாதுகாப்பதற்கு
   3. மக்களுக்குத் தனிமைப் படுத்தல் சட்டம் தொடர்பாக விளங்க வைப்பதற்கு

25) மழை காலங்களில் நகரப்புறங்களில் வெள்ளநீர் ஓடாது தேங்கி நிற்பதற்கான காரணமாக அமைவது,
   1. பொருத்தமாக வடிகால் அமைப்பு இன்மையால்
   2. நகரில் ஆறுகளும் குளங்களும் அதிகமாக உள்ளமையால்
   3. நகர மக்கள் குழாய் நீரைக் குறைவாகப் பயன்படுத்துவதால்

26) சூழலில் டெங்கு நுளம்புகளின் பெருக்கம் அதிகளவில் காணப்படுவதற்கான காரணம்,
   1. நுளம்புச் சுருள்களின் விலை அதிகம் என்பதால்
   2. டெங்கு நுளம்புக் குடம்பிகளை உண்ணும் மீன்கள் சூழலில் இல்லை என்பதால்
   3. சூழலில் நீர் தேங்கி நிற்பதால்

www.ikedu.lk

27) இயற்கைக் காடுகளை அழிப்பதால் ஏற்படக் கூடிய விளைவாக அமைவது,
   1. உணவுப் பொருட்களுக்குத் தட்டுப்பாடு ஏற்படும்
   2. இயற்கைச் சமநிலை பாதிப்படையும்
   3. மரத்தளபாடங்களின் விலை குறைவடையும்

28) வீதி ஓரங்களில் விற்பனை செய்யப்படும் உணவு வகைகளை உண்ணக் கூடாது என்பதற்கான காரணம்,
   1. அதிக விலையில் விற்பனை செய்யப்படுவதால்
   2. சுத்தமான பாதுகாப்பற்றதாக உள்ளமையால்
   3. வீதியில் உணவு வாங்கி உண்பது பொருத்தமற்றது என்பதால்

29) இலங்கையர்கள் வெளிநாடுகளுக்கு வேலை தேடிச் செல்வதற்குக் காரணமாக அமைவது,
   1. அதிக வருமானத்தைப் பெறமுடியும் என்பதால்
   2. விமானத்தில் பயணம் செய்ய விருப்பம் உள்ளதால்
   3. இலங்கையை விட வெளிநாடு மக்கள் வாழ்வதற்குப் பொருத்தமானது என்பதால்

30) இலங்கைக்கு அதிகளவில் சுற்றுலாப் பயணிகள் வருவதற்குக் காரணம்,
   1. இலங்கையில் உணவு வகை மலிவு என்பதால்
   2. இலங்கைக்கான விமானக் கட்டணம் குறைவு என்பதால்
   3. இலங்கை இயற்கை வளம் நிறைந்த அழகிய நாடு என்பதால்

31) சுரங்கத் தொழிலாளர் ஒவ்வொருவரும் தலைக்கவசம் அணிய வேண்டும் என்பதற்கான காரணம்
   1. தலைக்கவசம் அணிவதால் அழகு ஏற்படும் என்பதால்
   2. தலைக்கவசத்தின் விலை மிகக் குறைவு என்பதால்
   3. தலைக்கவசம் அணிதல் பாதுகாப்புக்கு என்பதால்

32) தங்க ஆபரணங்களை அணிவதில் பெண்கள் ஆர்வம் காட்டுவதற்கான காரணமாக அமைவது,
   1. தங்கத்தின் விலை மிக அதிகம் என்பதால்
   2. தங்க ஆபரணம் அணிந்தால் நோய் எற்படாது என்பதால்
   3. தங்க ஆபரணங்கள் தம்மை அழகுபடுத்தும் என்பதால்

33) இலங்கை ஜனாதிபதிக்கு மக்கள் மதிப்பளிப்பதற்குக் காரணம்,
   1. அவர் நாட்டின் உயர் தலைவர் என்பதால்
   2. இலங்கையர்களில் மிக மூத்த வயதினர் என்பதால்
   3. நாட்டு மக்கள் அனைவருக்கும் தெரிந்தவர் என்பதால்

www.lkedu.lk

34) சிகிரியா போன்ற வரலாற்று கலைத்துவப் படைப்புகளை நாம் பாதுகாக்க வேண்டும் என்பதற்கான காரணம்,
1. சிகிரியா ஓவியங்கள் பார்ப்பதற்கு அழகாக இருப்பதால்
2. அது உலக மரபுரிமை அடையாளமாக உள்ளமையால்
3. சிகிரியாவிற்கு இலகுவாகச் சுற்றுலா செல்லலாம் என்பதால்

35) இலங்கைத் தேயிலை உலகளவில் முதன்மை பெறுவதற்குக் காரணம்,
1. அது மலைநாட்டில் பயிர் செய்யப்படுவதால்
2. இலங்கைத் தேயிலை தரமும் சுவையும் அதிகமுள்ளமையால்
3. இலங்கைத் தேயிலையை மட்டுமே மக்கள் பயன்படுத்துவதால்

36) ஒவ்வொருவரும் செய்தி அறிக்கைகளைக் கேட்க வேண்டும் என்பதற்கான காரணம்
1. நாட்டு நடப்புகளை தினமும் அறிந்து கொள்ளலாம் என்பதால்
2. செய்திகளைக் கேட்பதால் ஞாபகசக்தி அதிகரிக்கும் என்பதால்
3. செய்திகளில் உண்மை தன்மை உள்ளது என்பதால்

37) தேன் பெறுமதி மிக்க ஒன்றாகக் கருதப்படுவதற்குக் காரணம்,
1. தேனை இலகுவாகப் பெறலாம் என்பதனால்
2. தேன் அனைத்து மக்களாலும் விரும்பப்படுவதால்
3. அது மருத்துவக் குணமுடையது என்பதனால்

38) பத்திரிகை வாசிப்பது பயனுடையது என்பதற்கான காரணமாக அமைவது,
1. எழுத்துக்கள் இலகுவாகப் பரீச்சயம் ஆகும் என்பதால்
2. உலக விடயங்களை அறியலாம் என்பதால்
3. வாசிப்புத் திறன் குறைவடையும் என்பதால்

39) கலப்பு உணவுகளை நாம் உண்ண வேண்டும் என்பதற்கான காரணமாக அமைவது,
1. கலப்புணவைக் குறைந்த விலையில் பெறலாம் என்பதால்
2. கலப்புணவு அதிக சுவையுடையது என்பதால்
3. உடலுக்கு சிறந்த போசனை கிடைக்கும் என்பதால்

40) இலங்கையில் யானைகளைக் கொல்வது தண்டனைக்குரிய குற்றமாகும் என்பதற்கான காரணம்,
1. இயற்கை உயிரினங்களைப் பாதுகாக்க வேண்டும் என்பதால்
2. யானை மிகப் பெரிய மிருகமாகும் என்பதால்
3. யானை அதிக விலை கூடியது என்பதால்

www.lkedu.lk

41) மழைக்காலங்களில் இலத்திரனியல் உபகரணங்களைப் பாவிப்பது ஆபத்தானது என்பதற்கான காரணம்,
   1. இடிமின்னல் தாக்கம் ஏற்படும் என்பதால்
   2. மின்சாரம் அதிகளவில் பாவிக்கப்படும் என்பதால்
   3. மழைக்காலத்தில் இலத்திரனியல் உபகரணங்களின் விலை அதிகம் என்பதால்

42) தலதாமாளிகை பெறுமதிமிக்க வணக்கத்தலமாகக் கருதப்படுவதற்கான காரணம்,
   1. அது கண்டியில் அமைந்துள்ளமையால்
   2. அனைவரும் செல்லக்கூடிய சுற்றுலாத் தலமாக உள்ளமையால்
   3. புத்த பெருமானின் தந்தத்தாது உள்ளமையால்

43) நாட்டின் பிரதான தலைமை அலுவலகங்கள் அனைத்தும் கொழும்பில் அமைந்துள்ளமைக்கான காரணம்
   1. கொழும்புக்குச் செல்வது இலகுவானது என்பதால்
   2. இலங்கையின் தலைநகர் கொழும்பாக உள்ளமையால்
   3. கொழும்பில் மக்கள் அதிகமாகச் செறிந்து வாழ்வதனால்

44) காண்டா மிருகங்கள் இன்று வேட்டையாடப்படுவதற்கான காரணம்,
   1. அதன் கொம்பு மருந்தாகப் பயன்படுத்தப்படுவதால்
   2. அது மனிதர்களுக்குத் தீங்கு விளைவிப்பதால்
   3. காண்டா மிருகம் உலகமெங்கும் அதிகமாக வாழ்வதால்

45) இன்று நாட்டில் முகக் கவசங்களது பாவனை அதிகரித்துள்ளமைக்கான காரணம்,
   1. முகக்கவசம் அணிவதால் அழகு ஏற்படும் என்பதால்
   2. மக்கள் அனைவரும் தொற்று நோயிலிருந்து பாதுகாப்புப் பெறுவதற்குப் பயன்படுத்துவதால்
   3. முகக்கவசங்களது விலை மிகக் குறைவானது என்பதனால்

46) மீனவர்கள் கடலுக்குச் செல்ல வேண்டாம் என வானிலை அவதான நிலையம் எச்சரிக்கை விடுத்தமைக்குக் காரணம்,
   1. மழைக்காலத்தில் மீன் குறைவாகப் பிடிபடுகின்றமையால்
   2. மீனவர்களுக்கு விடுமுறை தேவை என்பதனால்
   3. கடல் கொந்தளிப்பாக உள்ளமையால்

47) இலங்கையில் பல்கலைக்கழகங்கள் அமைக்கப்பட்டமைக்கான காரணமாக அமைவது,
   1. மாணவர்கள் உயர்கல்வியைப் பெற்றுக் கொள்வதற்காக
   2. பல்கலைக்கழகத்தில் கற்பது சமூக அந்தஸ்து கூடும் என்பதால்
   3. இலங்கையில் பல்கலைக்கழகங்கள் அமைப்பது இலகுவானது என்பதால்

www.ikeou.lk

48) பிரதான வீதியில் பாதசாரி கடவைக் கோடுகள் வெள்ளை நிறத்தில் வரையப்பபட்டுள்ளமைக்கான காரணம்
1. வெள்ளை நிறத் தீந்தை விலை குறைவு என்பதால்
2. இரவு வேளையில் வெள்ளை நிறம் தெளிவாகத் தென்படும் என்பதால்
3. கறுப்பு நிறத் தார் வீதியில் வரைவதற்கு வெள்ளை நிறமே பொருத்தமுடையது என்பதால்

49) பிரதான வீதிகளில் வீதிச் சமிக்ஞைக் குறியீடுகள் நடப்பட்டுள்ளமைக்கான காரணமாக அமைவது,
1. வீதி விபத்துக்களைத் தவிர்த்துக் கொள்வதற்காக
2. வாகன சாரதிகள் குறியீடுகளைக் கற்பதற்காக
3. பிரதான வீதிகளை அழகுபடுத்துவதற்காக

50) கடற்கரை ஓரங்களில் கலங்கரை விளக்கு அமைப்பதற்கான காரணம்
1. கடற்கரை அதிக வெளிச்சமாக இருப்பதற்கு
2. கப்பல்கள் தமது பயணப்பாதையை அறிவதற்கு
3. விமானங்கள் சரியான பாதையில் பயணிப்பதற்கு

51) "இன்று மழை பெய்யலாம்" என்று அப்பா கூறினார். இதற்குக் காரணமாக அமைவது,
1. அப்பா ஒரு சோதிடர் என்பதால்
2. வானில் கருமுகில்கள் காணப்பட்டமையால்
3. வானில் அதிகளவான நீர்காகங்கள் பறந்து சென்றமையால்

52) பாடசாலைச் சிற்றூண்டிச் சாலையில் காலை உணவு உண்ட மாணவர்கள் மயக்கமுற்றனர். இதற்குக் காரணாக அமைவது,
1. மாணவர்கள் அதிகளவில் உணவு உண்டமையால்
2. மாணவர்களுக்கு மேலும் பசி ஏற்பட்டமையால்
3. சிற்றூண்டிச்சாலை உணவு நஞ்சடைந்திருந்தமையால்

53) மக்கள் கூட்டம் கூட்டமாக பாதுகாப்பான இடம் நோக்கிச் சென்றமைக்கான காரணம்,
1. தாழ்நிலப் பிரதேசங்களில் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டமையால்
2. மக்களுக்கு இலவசமாக உணவு வழங்கப்படுவதனால்
3. மக்கள் கண்காட்சி பார்ப்பதற்காகச் சென்றமையால்

54) தற்போது பல பிரதேசங்களிலும் கொரோனா பரிசோதனை இடம் பெறுவதற்கான காரணம்,
1. மக்களை நோய் தொற்றிலிருந்து பாதுகாக்க
2. மக்களுக்கு நோய் தொற்றியுள்ளதா எனக் கண்டறிவதற்கு
3. அது இலவசமான பரிசோதனை என்பதால்

www.lkedu.lk

55) பறவைகள் மரங்களை நாடி வருவதற்கான காரணமாக அமையாதது,
1. கூடு கட்டுவதற்காக
2. பழங்களையும் காய்களையும் உணவாக உண்பதற்காக
3. மரத்தில் அமர்ந்து இயற்கை அழகை இரசிப்பதற்காக

56) உலகில் மான்கள் வேட்டையாடப் படுவதற்கான காரணமாக அமைவது,
1. மான் மனிதர்களுக்குத் தீங்கு விளைவிப்பதால்
2. மானிலிருந்து சுவையான இறைச்சியைப் பெறுவதற்காக
3. மானிலிருந்து அதன் கொம்பைப் பெறுவதற்காக

57) நீராபத்தில் சிக்கிய ஒருவருக்கு முதலுதவி அளிப்பதற்கான காரணம்,
1. வைத்தியசாலை கொண்டு செல்லும் வரை தற்காலிக சிகிச்சையாக அமைவதற்கு
2. முதலுதவி பெறுபவர் எமக்கு மதிப்பளிப்பதற்கு
3. உடலிலிருந்து அதிக குருதி வெளியேறாமல் இருப்பதற்கு

58) இலங்கையில் எரிபொருளின் விலை அதிகரிப்பதற்கான காரணமாக அமைவது
1. எரிபொருள் வெளிநாட்டு உற்பத்தி என்பதால்
2. இலங்கையில் கூடுதலான வாகனங்கள் பாவிக்கப்படுவதால்
3. எரிபொருள் குறிப்பிட்ட சில இடங்களில் மட்டும் விற்பனை செய்யப்படுவதால்

59) சில கிராமப்புற மாணவர்கள் கற்றலில் இடர்படுவதற்கான காரணம்,
1. போசாக்கான உணவு கிடைக்காமை
2. சிறந்த ஆசிரியர்கள் இல்லாமை
3. போதிய பாடசாலைக் கட்டிடங்கள் இல்லாமை

60) நாட்டில் குற்றச் செயல்கள் அதிகரித்துச் செல்வதற்கான காரணமாக அமைவது,
1. நாட்டிலுள்ள சட்டம் ஒழுங்கினை கடைப்பிடிக்காமை
2. சமூக அந்தஸ்தைப் பெற்றுக் கொள்வதற்காக
3. குற்றம் செய்பவர்களுக்கு தண்டனை வழங்கப்படாமையால்

- **நிகழ்வுகளுக்கான பொருத்தமான காரணத்தைத் தெரிவு செய்க.**

61) நிகழ்வு :- தம்பி ஒருநாள் கடலில் மூழ்கப் பார்த்தான். அன்றிலிருந்து அவன் கடற்கரைப் பக்கம் செல்வதில்லை. இதற்கான காரணம்,
1. கடற்கரைக்குச் செல்வது அவனுக்கு விருப்பமின்மையாகும்
2. கடலில் மூழ்கப்பார்த்த பயத்தின் காரணமாக
3. கடற்கரையில் அலையின் வேகம் அதிகம் என்பதால்

www.lkedu.lk

62) நிகழ்வு :- நந்தன் அன்று பாடசாலைக்குத் தாமதமாகவே வந்தான் இதற்குக் காரணமாக அமைவது,

1. அவனுக்குப் பாடசாலை வருவது விருப்பமின்மை
2. அவன் பாடசாலைக்கு வேகமாக நடந்து வந்தமை
3. அவன் உரிய நேரத்துக்கு வரும் பாடசாலைப் பேருந்தைத் தவறவிட்டமை

63) நிகழ்வு :- தேவு விளையாட்டில் மிகவும் கெட்டிக்காரன். எனினும் அவன் கற்பதில் ஆர்வம் காட்டுவதில்லை.

1. அவனிடம் போதியளவு புத்தகங்கள் இல்லாமை
2. அவனது தந்தை ஓர் ஆசிரியர் என்பதால்
3. அவனது பெற்றார் அவனைக் கற்பதில் ஊக்கப்படுத்தாமை

64) நிகழ்வு :- குணாளன் மற்றவருக்கு உதவி செய்யும் உயர்ந்த குணம் உள்ளவன். ஆனால் விபத்தில் சிக்கிய அவனது நண்பனுக்கு அவனால் உதவி செய்ய முடியாமல் போனது. இதற்குக் காரணமாக அமைவது,


1. நண்பனுக்கு உதவுவதில் அவனுக்கு விருப்பமின்மை
2. குணாளனின் வீடு வைத்தியசாலைக்கு அருகில் இல்லாமை
3. நண்பன் விபத்துக்குள்ளானமையை குணாளன் அறிந்திராமை

65) நிகழ்வு :- ஆர்த்தி மிகவும் கெட்டிக்காரி ஆனால் கடந்த தவணைப் பரீட்சையில் அதிக புள்ளியை அவளால் பெற முடியாமல் போனது. இதற்குக் காரணமாக அமைவது,

1. அவள் முயற்சியுடன் கற்றதால்
2. பரீட்சையில் வினாக்களுக்கு சரியாக விடையளித்தமையால்
3. அவள் சுகவீனமுற்றிருந்தமையால்

- **பற்சில்லுகளது அமைவின் அடிப்படையில் வினாக்களுக்கான விடையைத் தெரிவு செய்க.**

66)



அருகில் உள்ள இரண்டு பற்சில்லுகளில் பற்சில்லு A சுழலும் விதம் அம்புக்குறியினால் காட்டப் பட்டுள்ளது. அதன்படி சில்லு B யில் உள்ள பொருள்ள மேல்நோக்கிச் செல்லும் என்பது?


1. சரி 2. பிழை 3. கூறமுடியாது

67) இதில் பற்சில்லு B எப்பக்கமாகச் சுழலும்?

1. வலஞ்சுழியாக 2. இடஞ்சுழியாக 3. கூறமுடியாது

www.lkedu.lk

- **நான்கு பற்சில்லுகள் தரப்பட்டுள்ளன. அவற்றைக் கொண்டு வினாக்களுக்கான விடையைத் தெரிவு செய்க.**



68) இங்கு பற்சில்லு C சுழலும் விதம் தரப்பட்டுள்ளது. இதன்படி பற்சில்லு A யிலும் உள்ள அம்புக்குறி எப்பக்கமாகச் செல்லும்?

1. இடதுபக்கமாக 2. வலது பக்கமாக 3. கூறமுடியாது


69) சில்லு A யும் சில்லு Dயும் சுழலும் விதம் தொடர்பான சரியான கூற்று எது?

1. சில்லு Aயும் Dயும் ஒரே திசையில் சுழலும்
2. சில்லுகள் Aயும் Dயும் எதிர் எதிர்திசையில் சுழலும்
3. சில்லு A வலஞ்சுழியாகவும் சில்லு D இடஞ்சுழியாகவும் சுழலும்.

70) சில்லு C ஒரு முறை சுழன்று நிற்கும் போது சில்லு D யில் உள்ள ▲ இன் அமைவு எவ்வாறிருக்கும்?


1. 
2. 
3. 

- **பற்சில்லு ஒன்றுடன் படங்கள் பொறிக்கப்பட்டுள்ள பற்சில்லு சுழலி சங்கிலியால் தொடுக்கப்பட்டுள்ளது அதனடிப்படையில் வினாக்களுக்கு விடையைத் தெரிவு செய்க.**




www.ikedu.lk

71) அம்புக்குறி இப்போது சிங்கத்தின் படத்தைக் காட்டுகின்றது. இப்போது பற்சில்லு அடுத்து சுழலும் போது அடுத்து அம்புக்குறி காட்டுவது மயிலின் படமாகும். இதன்படி ஐந்தாவது தடவை சுழலும் போது அம்புக்குறி காட்டும் படம் எது?


1. 
2. 
3. 

72) பெரிய சில்லு 8 முறை சுழன்ற பின் அம்புக்குறி காட்டும் படம் எது?

1. 
2. 
3. 

73) பெரிய பற்சில்லு இடஞ்சுழியாகச் சுழலும் ஆயின் 6வது தடவையாகச் காட்டும் உரு காகம் என்பது?

1. சரி
2. பிழை
3. கூறமுடியாது



74) 5 பற்சில்லுகள் இங்கு தரப்பட்டுள்ளன. அவற்றில் சில்லு A சுழலும் விதம் இடஞ்சுழி எனத் தரப்பட்டுள்ளது. இதற்கமைவாக சில்லு Dயில் பொருத்தப்பட்டுள்ள F எனக் குறிப்பிடப்பட்டுள்ள குண்டு செல்லும் விதம் தொடர்பான சரியான கூற்று எது?

1. குண்டு F மேல் நோக்கிச் செல்லும்
2. குண்டு F கீழ்நோக்கிச் செல்லும்
3. குண்டு F இடஞ்சுழியாகச் செல்லும்

75) பற்சில்லுகள் A, E ஆகியவை தொடர்பான சரியான கூற்று யாது?

1. சில்லுகள் Aயும் Eயும் இடஞ்சுழியாகச் சுழலும்
2. சில்லுகள் Aயும் Eயும் வலஞ்சுழியாகச் சுழலும்
3. சில்லு A வலஞ்சுழியாகவும் சில்லு E இடஞ்சுழியாகவும் சுழலும்

www.ikdu.lk

காரண காரியங்களை இனங்காணல் திறன் தொடர்பான கடந்த கால வினாக்கள்

1) வாகன உரிமையாளர்கள் அனைவரும் செல்வந்தர்கள் அல்லர் எனின்,
   1. செல்வந்தர் ஒரு போதும் வாகன உரிமையாளர்கள் அல்லர்
   2. வாகன உரிமையாளர்களாக இல்லாத எல்லோரும் செல்வந்தர்கள் ஆவர்
   3. சில வாகன உரிமையாளர்கள் செல்வந்தர்கள் அல்லர்.

(ஆகஸ்ட் 2017)

2) பின்வரும் வாக்கியங்களில் சரியாக எழுதப்பட்டுள்ள வாக்கியத்தைத் தெரிவு செய்க.
   1. கெக்கு இரையை விழுங்குகின்றது
   2. கொக்கு இரையை விழுங்குகின்றது
   3. கொக்கு இரயை விழுங்குகின்றது

(ஆகஸ்ட் 2015)

- **தரப்பட்டுள்ள வாக்கியங்களிடையே மிகச் சரியான கருத்துள்ள வாக்கியத்தைத் தெரிவு செய்க.**

3) 1. அங்குமிங்கும் இருந்த ஒரு மரத்தின் கிளை மீது காகம் பார்த்தது.
   2. ஒரு மரத்தின் கிளை மீது இருந்த காகம் அங்குமிங்கும் பார்த்தது.
   3. அங்குமிங்கும் இருந்த காகம் ஒரு மரத்தின் கிளை மீது பார்த்தது.

4) 1. பெற்றோரிடமும் எப்போதும் ஆசிரியர்களிடமும் மிகப் பணிவாகப் பிள்ளைகள் நடந்து கொள்ள வேண்டும்.
   2. எப்போதும் பிள்ளைகள் மிகப் பணிவாக நடந்து பெற்றோரிடமும் ஆசிரியர்களிடமும் கொள்ள வேண்டும்.
   3. பெற்றோரிடமும் ஆசிரியர்களிடமும் பிள்ளைகள் எப்போதும் மிகப் பணிவாக நடந்து கொள்ள வேண்டும்.

(ஆகஸ்ட் 2010)

www.lkedu.lk

திறன் – 8

தகவல்களை ஒழுங்கமைத்தல்

01) சிறுமி ஒருத்தி பாடசாலை முடிவடைந்து வீடு வரும்போது வீதி ஓரத்தில் கிளி ஒன்று காயமுற்றுக் கிடப்பதைக் கண்டு அதனை எடுத்து சிகிச்சை அளித்துப் பறக்க விடும் சம்பவம் ஒழுங்கின்றி தரப்பட்டுள்ளது. அதன் மிகச் சரியான ஒழுங்கினை காட்டும் விடையைத் தெரிவு செய்க.

A - வீதி ஓரத்தில் கிளி ஒன்று காயமடைந்து பறக்க முடியாதிருப்பதை பார்க்கிறாள்.

B - காயமடைந்த கிளிக்கு சிகிச்சையளித்து பறக்க விடுகின்றாள்.

C - அதை அன்போடு தூக்கி வீட்டுக் கொண்டு செல்கிறாள்.

D - சிறுமி பாடசாலை முடிந்து வீதியால் வருகிறாள்.

1. D, A, C, B 2. D, C, B, A 3. A, D, C, B

02) வியாபாரி ஒருவர் சந்தைக்குப் புறப்பட்டுச் சென்று பொருட்களை விற்பனை செய்த நிகழ்வு ஒழுங்கின்றி தரப்பட்டுள்ளது. அதன் சரியான ஒழுங்கினை காட்டும் விடையினைத் தெரிவு செய்க.

A - பொருட்களை விற்ற மகிழ்ச்சியோடு வீட்டுக்கு வந்தார்.

B - சந்தையில் பொருட்களைக் கூவி விற்றார்.

C - சந்தைக்குப் பொருட்களைக் கொண்டு சென்றார்.

D - கொண்டு சென்ற பொருட்கள் யாவும் விற்கப்பட்டன.

1. C, B, A D 2. D, A, B, C 3. C, B, D, A

03) பறவை ஒன்று இரை தேடி வந்து தனது குஞ்சுகளுக்கு கொடுக்கும் நிகழ்வு ஒழுங்கின்றி தரப்பட்டுள்ளது. அதன் சரியான ஒழுங்கினைத் தரும் விடையினை தெரிவு செய்க

A - தாயின் வரவைக் கண்டு குஞ்சுகள் அலகை விரித்து ஒலி எழுப்பின.

B - தாய்ப் பறவை நீண்ட தூரம் இரைதேடிப் பறந்தது.

C - தாய்ப் பறவை அன்போடு தனது குஞ்சுகளுக்கு இரை ஊட்டியது.

D - தனக்கு கிடைத்த இரையை கொண்டு கூட்டை நோக்கிப் பறந்தது.

1. B, D, A, C 2. B, D, C, A 3. A, B, C, D

04) காலையில் பூ மலர்ந்து தேனீ தேன் பருகும் நிகழ்வு ஒழுங்கின்றி தரப்பட்டுள்ளது. அதன் மிகச் சரியான ஒழுங்கினை காட்டும் விடையினைத் தெரிவு செய்க.

A - காலை புலர்ந்தது மலர்கள் மகிழ்வுடன் மலர்ந்தன.

B - மலர்களில் பொதிந்திருந்த தேனைப் பருகியது.

C - மலர்ந்து மணம் வீசிய மலர்களில் தேனீ சென்று அமர்ந்தது.

D - தேனைப் பருகிய ஆனந்தத்துடன் பறந்து சென்றது.

1. A, B, D, C 2. A, C, B, D 3. A, B, C, D

www.ikeau.lk

LEARN EASY

- KNOWLEDGE IS POWER -

www.learneasy.lk || www.lkedu.lk

76667-4945

தரம் 5

zoom

அனுமதிகளுக்கு

76667-4945

சுற்றாடல்	புதன் வெள்ளி –	மாலை	6.15 – 7.15
ஆங்கிலம்	செவ்வாய் –	மாலை	7.00 – 8.00
தமிழ்	சனி ஞாயிறு –	மாலை	7.15 – 8.15
கணிதம்	சனி ஞாயிறு –	காலை	6.00 – 7.00
சிங்களம்	வியாழன் –	மாலை	7.10– 8.00
SPOKEN ENGLISH	சனி –	காலை	9.00– 10.00

நுண்ணறிவு (பிரிவு–1) – சனி ஞாயிறு – மாலை 6.15–7.10

நுண்ணறிவு (பிரிவு–2) – சனி ஞாயிறு – காலை 7.00–8.00

VIDEO RECORDING வழங்கப்படும் மாதம் – 1500/=

05) மீனவர் ஒருவர் குளக்கரைக்குச் சென்று தூண்டிலிட்டு மீனைப் பிடித்த நிகழ்வு ஒழுங்கின்றி தரப்பட்டுள்ளது. அதன் மிகச் சரியான ஒழுங்கை காட்டும் விடையின் கீழ்க் கோடிடுக.

A - குளத்தில் தூண்டிலையிட்டு மீன்பிடிக்கக் காத்திருந்தார்.

B - மீனவர் தூண்டிலுடன் குளக்கரைக்குச் சென்றார்.

C - மீன் பிடிபட்ட மகிழ்ச்சியோடு மீனவர் வீடு நோக்கிச் சென்றார்.

D - சிறிது நேரத்தில் தூண்டிலில் மீன் பிடிபட்டது.

1. A, B, D, C 2. B, A, D, C 3. A, B, C, D

06) அம்மா சந்தைக்குச் சென்று காய்கறி வாங்கி வந்து உணவு சமைத்துப் பரிமாறும் நிகழ்வு ஒழுங்கின்றி தரப்பட்டுள்ளது. அதன் சரியான ஒழுங்கைக் காட்டும் விடையைத் தெரிவு செய்க.

A - சில நிமிடங்களில் சுவையான உணவினைத் தயாரித்தார்.

B - காய்கறிகளைக் கழுவி நன்றாகச் சுத்தம் செய்தார்.

C - அம்மா சந்தைக்குச் சென்று காய்கறி வாங்கி வந்தார்.

D - தயாரித்த உணவினைச் சுத்தமாகப் பரிமாறுகின்றார்.

1. C, B, D, A 2. C, B, A, D 3. C, A, B, D

07) கேசவன், ஆசிரியரின் அறிவுரைகளுக்கேற்ப ஓவியத்தை வரைந்து காட்சிப்படுத்திய நிகழ்வு ஒழுங்கின்றி தரப்பட்டுள்ளது. அதன் சரியான ஒழுங்கினைத் தெரிவு செய்க.

A - ஆசிரியரின் அறிவுரைக்கேற்ப ஓவியத்தை வரைய ஆரம்பித்தான்.

B - தான் வரைந்த ஓவியத்தைக் காட்சிப்படுத்தினான்.

C - அழகான வர்ண ஓவியத்தை வரைந்து முடித்தான்.

D - ஆசிரியர், கேசவனிடம் அழகான ஓவியமொன்றை வரையுமாறு கூறினார்.

1. D, A, C, B 2. D, C, A, B 3. D, B, C, A

08) மாணவர்கள் சுற்றுலா சென்ற நிகழ்வொன்று ஒழுங்கின்றி தரப்பட்டுள்ளது. அதன் சரியான ஒழுங்கினைத் தெரிவு செய்க.

A - மாணவர்களோடு பேருந்து மெதுவாக நகர்ந்தது.

B - சுற்றுலா செல்வதற்காக பேருந்தில் மாணவர்கள் ஏறினார்கள்.

C - சுற்றுலாவின் போது பல இடங்களை பார்வையிட்டனர்.

D - சுற்றுலா சென்ற மகிழ்வோடு வீடு திரும்பினர்.

1. B, A, D, C 2. A, B, D, C 3. B, A, C, D

09) வகுப்பறையில் மாணவர்கள் பழப்பானம் தயாரித்து பருகிய நிகழ்வு ஒழுங்கின்றி தரப்பட்டுள்ளது. அதன் சரியான ஒழுங்கை காட்டும் விடையை தெரிவு செய்க.

A - மாணவர் தாம் சேகரித்த பழங்களை கழுவிச் சுத்தம் செய்தனர்.

B - தயாரித்த பானத்துடன் தேவையான அளவு சீனி சேர்த்தனர்.

C - பழங்களை வெட்டி அவற்றைக் கொண்டு பானம் தயாரித்தனர்.

D - தயாரித்த சுவையான பானத்தை பருகி மகிழ்ந்தனர்.

1. A, C, B, D 2. A, C, D, B 3. A, B, C, D

www.ikedu.lk

10) மாணவர்கள் வர்ணக் கீலங்களை பயன்படுத்தி அழகான பூக்களை தயாரித்த நிகழ்வு ஒழுங்கின்றி தரப்பட்டுள்ளது. அதன் சரியான ஒழுங்கினை காட்டும் விடையின் கீழ்க் கோடிடுக.

A - வெட்டிய வர்ணக் கடதாசி கீலங்களைக் கொண்டு பூக்களை ஆக்கினர்.

B - பிள்ளைகள் வர்ணக் கடதாசிக் கீலங்களை சேகரித்துக் கொண்டனர்.

C - ஆக்கிய அழகான பூக்களை காட்சிப்படுத்தினர்.

D - தேவையான அளவு கடதாசிக் கீலங்களை வெட்டி எடுத்தனர்.

1. A, B, C, D 2. B, D, A, C 3. B, A, D, C

11) நாங்கள் கொண்டாடிய தைப்பொங்கல் விழா தொடர்பான நிகழ்வு ஒழுங்கின்றித் தரப்பட்டுள்ளது அதன் சரியான ஒழுங்கினைக் காட்டும் விடையின் கீழ் கோடிடுக.

A - நாங்கள் அதிகாலையில் எழுந்து புத்தாடை அணிந்தோம்.

B - சிறிது நேரத்தில் பானையில் பால் பொங்கி வழிந்தது.

C - பானையில் அரிசி இட்டு பொங்கலைப் பொங்கி சூரியனுக்குப் படைத்து வழிபட்டோம்.

D - அப்பா இறைவனை வழிபட்டு பொங்கல் பானையை அடுப்பில் வைத்தார்.

1. A, D, C,B 2. A, B, C, D 3. A, D, B, C

12) பாடசாலை ஆரம்பமாகி முடிவுறும் நிகழ்வு ஒழுங்கின்றித் தரப்பட்டுள்ளது. அதுக்கு சரியான ஒழுங்கினைக் காட்டும் சரியான விடையினைத் தெரிவு செய்க.

A - முதல் மணி ஒலித்து காலைக்கூட்டத்திற்கு மாணவர்கள் நிரையாகச் சென்றனர்.

B - காலை உணவுக்காக இடைவேளை விடப்பட்டது.

C - பிற்பகலானதும் மணி ஒலிக்க பாடசாலை நிறைவு பெற்றது.

D - காலைக்கூட்டம் முடிவுற்றதும் பாடங்கள் இடம்பெற்றன.

1. A, D, B, C 2. A, B, C, D 3. A, D, C, B

13) ஓட்டநிகழ்வொன்று ஆரம்பமாகி முடிவுற்ற நிகழ்வு ஒழுங்கின்றி தரப்பட்டுள்ளது. அதன் மிகச் சரியான ஒழுங்கினைத் தெரிவு செய்க.

A - ஓடுவதற்கு ஆயத்தமாக வீரர்கள் நின்றனர்.

B - மிக விரைவாக முடிவுக் கோட்டைக் கடந்தனர்.

C - வெடி ஒலி கேட்டவுடன் ஓட ஆரம்பித்தனர்.

D - வீரர்கள் குறிப்புக்குச் சென்றனர்.

1. D, A, B, C 2. D, A, C, B 3. D, B, C, A

14) தூக்கணாங்குருவி கூடமைக்கும் நிகழ்வு ஒழுங்கின்றித் தரப்பட்டுள்ளது. அதன் சரியான ஒழுங்கினைக் காட்டும் விடையைத் தெரிவு செய்க.

A - தூர இடத்திற்குச் சென்று புற்களைப் பறித்து கூட்டை அமைக்கத் தொடங்கியது.

B - தனது கூட்டை அமைக்க பொருத்தமான மரக்கிளையை தெரிவுசெய்தது.

C - கூட்டை அழகாகவும் நேர்த்தியாகவும் கட்டி முடித்தது.

D - தான் கட்டிய கூட்டில் முட்டையிட்டு மகிழ்ச்சியாக வாழ்ந்தது.

1. B, A C, D 2. A, B, C, D 3. B, A, D, C

www.lkedu.lk

15) பாடசாலையில் பரிசளிப்பு விழா நிகழ்வு ஒழுங்கின்றி தரப்பட்டுள்ளது. அதன் சரியான ஒழுங்கினைத் தருக.

A - மங்கல விளக்கேற்றலோடு இறைவணக்கமும் இடம்பெற்றது.
B - மாணவர்களுக்கு பரிசில்கள் வழங்கப்பட்டது.
C - அதிதிகள் மாலை அணிவித்து வரவேற்கப்பட்டனர்.
D - அதிதி உரையினைத் தொடர்ந்து நன்றியுரை இடம்பெற்றது.
E - அதிபர் தலைமையுரையை நிகழ்த்தினார்.

1. C, A, B, E, D 2. C, A, D, E, B 3. C, A, E, B, D

16) நூல் இழைகள் துணிகளாக தயாரிக்கப்பட்டு பொதிசெய்யப்பட்ட நிகழ்வு ஒழுங்கின்றி தரப்பட்டுள்ளது. அதன் சரியான ஒழுங்கினைத் தெரிவு செய்க.

A - நிறமூட்டப்பட்ட நூல்கள் உலரவிடப்பட்டன.
B - வெள்ளை நூல்கள் பல நிறமூட்டப்பட்டன.
C - நெய்யப்பட்ட துணிகள் பொதிசெய்யப்பட்டன.
D - நூல்களைக் கொண்டு தறிமூலம் துணிகளாக நெய்யப்பட்டன.

1. B, A, D, C 2. B, A, C, D 3. A, B, D, C

17) தோட்டத்தில் சென்று பூக்களைப் பறித்து அழகான மாலை தயாரிக்கும் நிகழ்வின் ஒழுங்கினைத் தருக.

A - பின்னர் பூக்களைக் கொண்டு மாலைகளை ஆக்கினர்.
B - தோட்டத்திற்குச் சென்று பூக்களைப் பறித்தனர்.
C - ஆக்கப்பட்ட மாலைகளை வரிசையாக காட்சிப்படுத்தினர்.
D - பறித்த பூக்களை வகைப்படுத்தினர்.

1. B, A, D, C 2. B, D, A, C 3. B, D, C, A

18) ஒரு மழை நாளில் இடம்பெற்ற நிகழ்வுகள் ஒழுங்கின்றி தரப்பட்டுள்ளன. அவற்றின் சரியான ஒழுங்கினை தெரிவு செய்க.

A - வீதியெங்கும் மழை நீர் நிரம்பிக் காணப்பட்டது.
B - தெளிந்த வானில் கரும்மேகங்கள் சூழத்தொடங்கியன.
C - சிறிது நேரத்தில் அதிக மழை பெய்யத் தொடங்கியது.
D - குளிர் காற்று வீச சிறு தூறலாக மழை பெய்ய ஆரம்பித்தது.

1. B, D, A, C 2. D, B, C, A 3. B, D, C, A

19) தேயிலைக் கொழுந்து பறித்து அது தேயிலையாக மாறும் நிகழ்வு ஒழுங்கின்றி தரப்பட்டுள்ளது. அதன் சரியான ஒழுங்கினைத் தருக.

A - பின்னர் அக்கொழுந்துகள் பதப்படுத்தப்படுவதற்காக ஆலைக்கு அனுப்பப்பட்டன.
B - ஆலையில் கொழுந்துகள் பதனிடப்பட்டு சுவையான தேயிலையாக மாற்றமடைந்தன.
C - பறிக்கப்பட்ட தேயிலைக் கொழுந்துகள் நிறையிடப்பட்டன.
D - பெண் தொழிலாளிகள் வரிசையாக தேயிலைக்கொழுந்துகளை பறித்தனர்.

1. D, C, A, B 2. D, C, B, A 3. D, B, C, A

www.lkedu.lk

20) கத்தரிப் பயிர்ச்செய்கையின் நிகழ்வு ஒன்றின் சரியான அமைவை தெரிவு செய்க.

A - கத்தரி விதைகள் நேர்த்தியாக நாற்றுமேடையில் இடப்பட்டன.

B - நாற்றுக்கள் சமஇடைவெளியில் பாத்திகளில் நடப்பட்டன.

C - நீண்ட பராமரிப்பின் பின்னர் பூத்துக் காய்த்த கத்தரிகள் அறுவடை செய்யப்பட்டன.

D - விதைகள் முளைத்து அழகான நாற்றுகளாக மாறின.

1. A, B, C, D 2. A, D, B, C 3. B, A, D, C

● **ஆங்கில எழுத்துக்களில் தரப்பட்டுள்ள சொற்களைக் கொண்டு பொருள் தரும் வகையில் வாக்கியங்களை ஆக்குவதற்குரிய சரியான ஒழுங்கினை காட்டும் விடையினைத் தெரிவு செய்க.**

21) A - பிதாவும், B - தெய்வம், C - முன்னறி, D - அன்னையும்

1. A, D, C, B 2. A, C, B, D 3. D, A, C, B

22) A - சென்றார், B - காலையில், C - அம்மா, D - கோயிலுக்கு

1. A, D, B, C 2. C, B, D, A 3. D, A, B, C

23) A - ஓவியத்தை, B - அழகான, C - வரைந்தான், D - சிறுவன்

1. A, B, C, D 2. D, B, A, C 3. D, A, B, C

24) A - அம்மா, B - தயாரித்தார், C - தேநீர், D - சுவையான

